**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : |
| Preliminary Register | : | Case No. | : **S.C.27/2020** |
| Sessions | : | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution | : **P.W.7** |
| | | Defence | : **D.W.** |
| | | Court | : **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | கருணாநிதி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.02.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். ஆம்புலன்ஸ் ஓட்டுநராக இருக்கிறேன். வழக்கில் இறந்துபோன வீரமணிகண்டனை தெரியும். வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி டால்டாகண்ணனை 5 வயது முதலே தெரியும். கடந்த 06.07.2020ம் தேதி இரவு 08.30 மணியளவில் BC Hostel உள்ளே நான், வீரமணிகண்டன், ராஜா, லோகநாதன், ஈசாக், சித்திக் ஆகியோர்கள் சீட்டு விளையாடி கொண்டிருந்தோம். சீட்டுவிளையாண்டு கொண்டிருக்கும்போது போது எதிரிகள் அங்கு வந்தார்கள். அப்போது முருகானந்தம் கெட்டவார்த்தையால் வீரமணிகண்டனை பேசினார். 5 நிமிடம் வாக்குவாதம் நடந்தது. நான் வெளியே வந்துவிட்டேன். சத்தம் மட்டும் கேட்டது, விடுங்க, விடுங்க என்று சத்தம்கேட்டது. நான் 10 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வண்டி நிற்கும் அரசு மருத்துவமனை அருகில் வந்துவிட்டேன். நான் வந்து 2நிமிடத்தில்

வீரமணிகண்டன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். வழக்கு எதிரிகள் அவரை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நாங்கள் சீட்டு விளையாட்டிகொண்டிருக்கும் போது வழக்கு எதிரிகள் வந்தபின்னர் யார் வெளியே போக சொன்னார்கள் என்றால் அங்கு கயாமுயா என்று சத்தமாக இருந்தது, யார் சொன்னார்கள் என்று தெரியவில்லை. ஆஸ்டலுக்கும், பெரியஆஸ்பத்திரி வாசலுக்கும் இடையே சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். ஆஸ்பத்திரி வாசல் அருகில் எப்போதும் என்னுடைய ஆம்புலன்ஸ் நிற்கும். ஆஸ்டலில் இருந்து சத்தம்போட்டால் அங்கு கேட்கும் என்றால் கேட்காது. டிஸ்பிளை இல்லாத செல்போனை கொடுத்துவிட்டதாக எதிரிகள் வீரமணிகண்டனிடம் தகராறு செய்யும்போது நான் அங்கிருந்தேன். அப்போது பார்த்தா (எ) பார்த்திபன் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து வீரமணிகண்டனின் தலையின் பின்பக்கம் வெட்டினார் என்றும், வீரமணிகண்டன் ஓடி காம்போண்ட் சுவரை தாண்டும்போது அந்த அரிவாளை வாங்கி டால்டாகண்ணன் தலையில் வெட்டியதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. வீரமணிகண்டன் காம்போண்ட் ஏறி குதித்தபின்னர் முருகானந்தம் (எ) ஆனந்த் கையில் வைத்திருந்த பட்டா கத்தியால் அவருடைய கழுத்தை அறுத்தார் என்று போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. கழுத்தை அறுத்த பின்னர் அய்யனார் மோட்டார்சைக்கிளை எடுத்து சென்றுவிட்டார் என்றும், மற்ற 3பேர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும் நாங்கள் சத்தம்போட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்காக வீரமணிகண்டனை தூக்கிபார்க்கும்போது அவருக்கு உயிர் இல்லை என்று தெரிந்தது என்றும், அதற்குள் ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எதிரிகளை

எனக்கு நீண்ட நாட்களாக பழக்கம் என்றும், நாங்கள் ஒரே பகுதியில் வசிக்கிறோம் என்றும், எதிரிகள் எனக்கு நன்கு பழக்கம் என்பதால் தற்போது எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையின்போது சொன்னேன். நடந்த விவரத்தை சொன்னேன். நாங்கள் சீட்டு விளையாண்ட அன்று BC Hostelலில் மாணவர்கள் இல்லை. அன்று ஆஸ்டல் வாடன், வாஸ்மேன் இல்லை. விடுதியின் கதவு பூட்டியிருந்தது. ஆஸ்டலுக்கு உயரமான சுற்றுசுவர் உண்டு. எப்படி அங்குபோய் சீட்டு விளையாண்டோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்று ஞாபகமில்லை, காம்போண்ட் ஏறிபோனோம். ஆஸ்டல் கட்டிடத்திற்குள்ளே மின்சார வசதி உண்டு. சீட்டுகட்டுகளை அங்கேயே போட்டுவந்துவிட்டோம். வழக்கு சம்பந்தமாக மறுநாள் வெங்கடேஷ் டீஸ்டால் அருகில் காலை 09.00 மணியளவில் என்னை விசாரித்துவிட்டு அதன்பின்னர் காவல்நிலையம் அழைத்து சென்று விசாரித்தார். எந்த எதிரி டிஸ்பிளை இல்லாத போனை கொடுத்துவிட்டாய் என்று வீரமணிகண்டனிடம் கேட்டார் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. அந்த மாதிரி சம்பவம் நடைபெறாததால் தான் எந்த எதிரி என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எந்த எதிரி என்று பெயர் சொல்லவில்லை. வழக்கு சம்பவத்துக்கும் எதிரிகளுக்கும் சம்பவம் இல்லையென்றால் சரியல்ல.

**<u>4வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>**

சம்பவதேதியில் ஆஸ்டல் ஏன் பூட்டியிருந்தது என்றால் அன்று ஞாயிற்றுகிழமை. அன்று ஆம்புலன்ஸ் நிற்கும் இடத்தின் அருகில் கூட்டம் இல்லை. நார்மலாக இருப்பது போன்று இருந்தது. நாங்கள் சீட்டு விளையாடபோகும்போது எப்போதும் போல் நார்மலாக இருந்தது. அது கொரானா காலகட்டம் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் கூறும்

சம்பவதேதியில் கொரானா காலகட்டம் என்பதால் ஜனநடமாட்டம் தடைசெய்யப்பட்டிருந்தது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.